தமிழ் தேசியத்தின் தலைமகள்

# திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம்

## அகவை 80



லண்டன், 03 ஜூலை 2013



தமிழரசுக்கட்சியின் பொது மேடைகளில் அவரது கம்பீரமான பிரசன்னம்
மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றது.
மேடைகளில் அவர் தேசிய எழுச்சிப் பாடல்களை இசைத்தபோது
கூட்டம் உணர்வு வெள்ளத்தில் தோய்ந்தது.
அரசியல் அணி திரட்டலில் அரசியல் விடுதலை இயக்கப் பாடல்கள்
ஆளுமை கொண்ட பெண்களால் இசைக்கப்பட்டபோது
அது பெரும் ஆகர்ஷண சக்தியாய் திகழ்ந்திருப்பதை
இந்திய சுதந்திரப் போராட்டங்களில்
காணமுடிந்திருக்கிறது.
ஆபிரிக்க நாடுகளின்
விடுதலை இயக்கப் போராட்டங்களில்
அரசியல் மேடைகளில் தோன்றி
ஆபிரிக்கப் பெண்மணிகள் இசைத்த பாடல்கள்
புரட்சி அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கின்றன.



ஈழத் தமிழ் இனத்தின் தானைத் தலைவன்
அமரர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் அவர்களின் மனையாள்

தமிழ் மக்களினது உரிமைப் போராட்டத்தின்
தலைமகள்

# திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம்

அவர்களின்

# 80 ஆவது அகவைப் பூர்த்தியை

கௌரவிக்கும் கையேடு

குடும்ப நண்பர்களின் வெளியீடு
23 Spring Rise Road, Hither Green, London SE13

அன்பான தமிழ் மக்களே,

எமது அன்புக்கும் மதிப்புக்கும் உரியவராக, தமிழினத்தின் தானைத் தலைவனாக, ஈழத் தமிழ்த் தேசியத்தின் உரிமைப் போராட்டத்தை நாற்பது ஆண்டுகள் தலைமை தாங்கியும் முன்னின்றும் நடாத்தியவர் காலம்சென்ற அமிர்தலிங்கம் அவர்கள். தமிழினத்துக்கு மிகத் தேவையான வேளையில் அவரது உயிர் பறிக்கப்பட்டு விட்டது.

அவரது அருமை மனையாளான திருமதி மங்கையற்கரசி அம்மையார் அவர்கள் தலைவரைக் கரம்பிடித்த நாளிலிருந்து அவரது உயிர் அநியாயமாகப் பறிக்கப்படும் வரையும் எமது உரிமைப் போரின் முன்னணிப் போராளியாகச் செயற்பட்டவர். துப்பாக்கி வேட்டு தலைவரின் உயிரை மட்டும் பறிக்கவிலலை. அதனுடன் சேர்த்து அம்மையாரின் செயற்பாட்டையும் முடக்கி விட்டது.

தலைவரைப்பற்றிச் சொல்லும்போதும் எழுதும்போதும் அவரின் கால்படாத தமிழ்க் கிராமம் ஈழத்தில் இருக்காது என்பார்கள். ஆனால் அப்படியான புகழுக்கு தலைவருடன் எப்போதுமே பிரியாமல் செயற்பட்ட அமமையாரும் காரணம் என்பதில் ஐயமில்லை. இப்படியான அம்மையாரை அவர் வாழும் போதே கௌரவிக்க வேண்டும் என விரும்பினோம். அவரின் எண்பதாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்ற இன்றைய நாளில் அவருடன் பழகிய, எழுத்துத்துறையில் தடம்பதித்த சிலரின் கட்டுரைகளைத் தாங்கி இந்தச் சிறு பிரசுரம் வெளிவருகிறது.

இந்தக் கட்டுரைகள் மறைக்கப்பட்ட பல செய்திகளை உங்களுக்குச் சொல்கிறது. வாசியுங்கள்.

**தலைவரின் பாத மலருக்கு இது எங்கள் காணிக்கை.**

அன்புடன்

**தில்லைநாயகம் அருள்தாஸ்**
தமிழர் விடுதலைக் கூட்டணி லண்டன் கிளை முன்னாள் அமைப்பாளர்.
06 யூலை 2013



## மங்கையற்கரசி - 80

# மங்கையர்க்கு அரசி அவர்

*பொ.கனகசபாபதி.*

அவரை நான் எனது ஏகபோக தலைவராக கொண்டது 1950இல். சண்டிலிப்பாயின் இளைஞர் முன்னேற்றச் சங்கத்தின் செயலாளராக இருந்தேன். தந்தை செல்வா அவர்களைத் தமிழ் அரசுக்கட்சியின் கொள்கை விளக்கக் கூட்டம் ஒன்றிற்கு அழைத்திருந்தோம். அவருடன் சட்டக் கல்லூரி மாணவராக இருந்த இவரும் வநதிருந்தார். அவர் உரை என்னை மயக்கியது. அந்த மயக்கத்திலிருந்து இன்று வரை நான் மீளவில்லை. அடுத்தவாரமே யாழ் நகர் சென்று தமிழரசுக்கட்சியின் வாலிப முன்னணியில் உறுப்பினர் ஆகிவிட்டேன்.

சகோதரி மங்கையர்க்கரசிக்கும் அவருக்கும் திருமணம் நடந்தது 1953இல் என எண்ணுகிறேன். நான் அச்சமயம் இந்தியாவில் கல்வி கற்றுக் கொண்டிருந்தமையால் அழைப்பு கிடைத்தும் சமூகம் கொடுக்க முடியாது போய்விட்டது. விடுமறை வந்தது. ஊர் வந்த நான் அவர்களைப் பார்க்க விரும்பினேன். யாழ்ப்பாணத்தில் வசிக்கிறார்கள் என அறிந்து அங்கு சென்றேன். கதவினைத் தட்டியதும் புன்னகைத்த முகத்துடன் பேரெழில் கொண்ட ஒரு மாது கதவினைத் திறந்தார். அவர்தான் எனது தலைவரின் இனியாள் என்பதை அறிந்து கொள்ள நேரம் எடுக்கவில்லை. உள்ளே வாருங்கள் அவர் வெளியே போய் விட்டார் என்றார். அந்த நேரம் பார்த்து திரு துரைரத்தினமும் வந்தார். அப்போது அவர் வெறும் ஆசிரியரே ஆனால் அடுத்த தேர்தலில் பருத்தித்துறைத் தொகுதியின் வேட்பாளராக இனம் காணப் பட்டவர். அம்மையாருக்கு அவர் ஏற்கனவே பரிச்சயமானவர் ஆனால் என்னை அன்று தான் முதல் முதலாக அவர் பார்க்கிறார். அங்குதான் அவரது தலையாய பண்பினைக் காண முடிந்தது. எம் இருவரையும் மிகவும் வாத்சல்யத்துடன் விருந்தோம்பினார். எவ்விதமான வேறுபாடுமின்றி இருவரோடும் மிகவும் நல்ல முறையிலே உரையாடினார். அவரது சகசமாகப் பழகிய பக்குவம் காரணமாக, அவர் முன்பின்னே பழக்கமில்லாதவர் என்ற உணர்வு எனக்கு எளவே இல்லை. அவர் ஒரு அரசில்வாதியின் மனைவியாவதற்கு முழுமையான தகுதி உடையவர் என்ற எனது மனம் அவர் மேல் ஒரு பாசத்தை ஏற்படுத்தியது. தலைவர் அவர்கள் என்னுடன் எத்தனை பாசத்துடன் பழகினார் என்பதை வீடு திரும்புகையில் இரை மீட்டவன் பர்த்தாவுக்கேற்ற பதிவிரதை என்ற கணிப்புடன் வீடு சேர்ந்தேன். **ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழக்கை** அவரது சொத்து.

**மங்கையர்க்கு அரசி அவர்.......**

1956ஆம் ஆண்டுப் பாராளுமன்றத் தேர்தலின் போது நான் இந்தியாவில் இருந்தேன்.வட்டுக் கோட்டைத் தொகுதி உடுவில் தொகுதி என்ற இன்னொரு தொகுதியைப் பிரசவித்தது. என்னை தலைவரிடமிருந்து பிரித்துவிட்டது. 1960ஆம் ஆண்டுத் தேர்தலில் உடுவில் தொகுதியில் போட்டியிட்ட ஹண்டி பேரின்பநாயகத்திற்காக நான் பிரசாரம் செய்தேன். நான் திருமணம் செய்த பின்னர் காங்கேசந்துறை வாசியாகினேன். தோழர் வி.பொன்னம்பலத்துக்கு ஆதரவுக் கரம் கொடுத்து நின்றபோதும் தலைவர் அவர்களை எங்கு சந்தித்தாலும் மிகவும் நல்ல முறையிலே பழகத் தவறியதில்லை.15 வயதில் என்னை எத்தனை பாசத்துடன் அரவணைத்தாரோ அந்த அன்பு என்றுமே குறைந்ததில்லை.

தந்தை செல்வாவின் மறைவுக்குப் பின்னர் தலைவர் அவர்கள் காங்கேசந்துறை பாராளுமன்ற உறுப்பினர் ஆன பின்னர் நமக்கிடையான பிணைப்பு மீண்டு முன்னிலும் வலுப் பெற்றது. அம்மையாரின் தனித்துவத்தினை அவதானிக்கும் சந்தரப்பங்கள் நிறையவே கிடைத்தன. மகாஜனாவின் பரிசளிப்பு விழாவினுக்குப் பிரதம அதிதிகளாக வந்தனர். முதல்முறை எமது பாடசாலை நிகழ்ச்சி ஒன்றினுக்குச் சகோதரி வந்திருந்தார். கலகலவென எல்லா ஆசிரியைகளோடும் பழகிய விதம். மேடையில் பரிசு பெற்ற அத்தனை மாணவர்களையும் முகமலர்ச்சியுடன் அரவணைத்தோ ஆலிங்கனம் செய்தோ தனது மகிழ்வினைத் தெரிவித்த பாங்கு அவரது தாயுள்ளம் எத்தனை விசாலமானது என்பதை உணர வைத்தது. இராமநாதன் கல்லூரியிலே நுண்கலைத் துறையில் பயிற்சி பெற்றமையால் மேடையில் மாணவ மாணவியர் செய்த கலைநிகழ்ச்சிளை நுணுக்கமாக அவதானித்து நன்மை பயக்கவுள்ள குறிப்புக்களைச் சொல்லி அவர்களை ஊக்குவித்தமை மிக்க இளம் பராயத்திலேயே தனது மூத்தமகனை தாயகத்தின் விடுதலைக்காகப் பிரிந்து விடவேண்டிய துன்பம் இளம் தலைமுறையினரில் அவர் காட்டிய போலியற்ற தாயன்பினால் புலப்பட்டது. **அன்பீனும் ஆர்வ முடைமை அது ஈனும் நண்பு.** அவரது பண்பு.

பாடசாலை நிர்வாகித்தில் அரசியல் புகமுனைந்த பொழுது அதற்கு நான் சவால் விட்டேன்.அதன்காரணமாக் திடீரெனத் தோன்றிய அரசியல் வாதிகளும் என்னில் பொறாமைப்பட்ட கல்வித்துறையினரும் ஒன்று கூடி என்னை இடம் மாற்றிய பொழுது அவர்கள் சற்றும் எதிர்பாராவண்ணம் தலைவர் அவர்கள் கல்வியில் அரசியல் புகப்படாது என்ற எச்சரிக்கையை கட்சியினருக்கே எடுத்துககூறி

**மங்கையர்க்கு அரசி அவர்.......**

எனது இடமாற்றத்தை இரத்துச் செய்தபோது அவரது நாணயத்தினைக் கண்டு நான் பெருமினேன். எனது இடமாற்றத்தினை இரத்து செய்வதற்குத் தலைவர் காரணராயினார் என்றாலும் அதுற்கு உந்து விசையாக அமைந்தவர் அம்மையார் என்பதை என்னால் படிப்படியாகத் தான் உணரமுடிந்து. **மெல்லெனப்பாயும் தண்ணீராக** அவர் நின்றார்.

இடமாற்றத்தினால் ஏற்பட்ட விரக்தி, அதன் தொடர்ச்சியாக ஏற்பட்ட சில அல்லல்கள் எனது மனத்தினில் தீராத சுமையாக நின்றமையால் நாட்டை விட்டே செல்வது என்ற எனது தீர்மானத்தைச் செயற்படுத்துமுகமாக நைஜீரியா செல்லத்திட்டமிட்டுச் செயற்படுத்தினேன். எல்லா ஒழுங்குகளும் முடிவுற்று விட்டன.தலைவரிடமும் அம்மையாரிடமும் பயணம் சொல்வதற்காக அவர்களது மூளாய் வாசஸ்தலத்திற்கு நானும் எனது மனைவியும் சென்றோம். அம்மையார் கண்ணீர் உகுத்தபடி எங்களை ஆலிங்கனம் செய்து பிரியாவிடை ஈந்தது இன்றும் என் கண் முன்னே நிற்கிறது. ஏன் இந்த ஏக்கம்? மாணவருக்கான கண்ணீரா? பாடசாலைக்கானதா அல்லது நாட்டிற்கானதா? **ஆர்வலர் புன்கண்ணீர் பூசல் தரும்** அவரது இதயம்

நாம் நைஜீரியா சென்று விட்டோம். எனது ஆண்மக்கள் இருவரும் எமது அபிமான மாணவி மலர்விழி கண்காணப்பில். மலர்விழியினை அம்மையார் தனது மருமகளாக வரித்தபின்னர் எனது இருமக்களும் அம்மையாரது பராமரிப்பிலேலேயே வலம் வர ஆரம்பித்து விட்டனர்.அவர்களது நன்மை தீமைகளில் அத்தனை கவனம் எடுத்தார்கள் மூத்தமகன் பங்களுர் மருத்துவக் கல்லூரிக்கு புகுவதற்கு எடுத்த அக்கறையும் இழைய மகன் நல்லழகு தொழில் நுட்பக் கல்லூரிக்கு நுளைவதற்கும் பெற்ற தாய்தந்தையராகிய நாம் எடுத்த முயற்சியிலும் பார்க்க அவரகள் எடுத்தது பாரியது. **செய்யாமல் செய்யும் உதவி,** அவர் சித்தாந்தம்

காலம் விரைவாக ஓடியது. நாம் கனடாவிற்குக் குடிபெயர்ந்தோம். எனது மனைவியார் கொடிய புற்று நே-ாயினுக்கு ஆளாகி 1988 ஒக்ரோபர் மாதம் உயிர் நீத்தார். சிலமாதங்களின் பின்னர் கொடியவர்களின் துப்பாக்கிக்கு இரையாகித் தலைவர் அமரராயினார். சிறிது காலத்தின் பின்னர் தனது சகோதரி குடும்பத்தினரைப் பார்க்கக் கனடா வந்தவர் எனது வீடு தேடி வந்து எனது மனைவியின் இழப்புக்காக ஆறுதல் கூறினார்.

**மங்கையர்க்கு அரசி அவர்.......**

நான் செய்வதறியாமல் திக்கு முக்காடினேன்.அவர் இழந்ததோ ஒரு நாட்டின் வருங்காலத்தை நான் இழுந்தது ஒரு குடும்பத் தலைவியை. அவர் தனது இழப்பினைக் பெரிதாகக் காட்டாமல் எனக்கு ஆறுதல் கூறுகிறாரே. இவரை என்னென்று சொல்வேன். **அல்லல் அருள் ஆள்வார்க்கு இல்லை** என்பேன்.

வடக்குக் கிழக்கு மாகாணங்களின் பிரபலமாயிருந்த அதிபர்கள் பற்றி “எம்மை வாழ வைத்தவர்கள்” என்ற ஒரு நூலினை எழுதினேன். அதில் நான் பழகிய, கண்ட, வாசித்த கேள்விப் பட்ட அதிபர்கள் 23 பேர்கள் பற்றி எழுதியிருந்தேன். அவர்களில் ஒருவர் இராமநாதன் கல்லூரியின் அதிபராக விளங்கியவரும் அக்கல்லூரியின் பொற்காலததுக்குரியவருமான திருமதி பிள்ளை அவர்கள். அவரை நான் கண்டதுமில்லை, அவர் பற்றி வாசிப்பதற்குப் போதிய தகவல்களும் கிடைக்கவும் இல்லை. ஆனால் அந்த அதிபர் மீது அபாரமான பக்தி கொண்ட மூன்று பழைய மாணவிகள் போதிய தகவல்களை வழங்கியமையால் தான் என்னால் ஒரு விபரமான கட்டுரையினை எழுத முடிந்தது. அந்த மூவரில் ஒருவர் திருமதி மங்கயரக்கரசி என நான் கூறத்தேவையில்லை. பாடசாலையை விட்டு விலகி ஐம்பது வருடங்களுக்கு மேலாகியும் அதிபர் பற்றித் தத்துரூபமாக எடுத்துக் கூறியதுடன் அவரது குண நலங்களை விஸ்தாரமாக விபரிப்பதற்கான குரு பக்தியைக் கண்டு நான் வியப்புற்றேன்.

**மறவற்க மாசற்றோர் கோண்மை** அவரது நெறி.

*****

தன் கணவனை முதல் நாள் போரிலே இழந்தும் மறுநாள் தன் பச்சிளம் பாலகனை போருக்கு அனுப்பிவிட்டு வீட்டிலிருந்த தாயிடம் உன் மகன் எங்கே என அயலவர்கள் கேட்க, புலி போர்க்களம் சென்று விட்டது. அந்தப் புலி வளர்ந்த குகை இதோ. என தன் வயிற்றைச் சுட்டிக்காட்டிய புறநானூறு கண்ட வீரத்தாயின் பரம்பரையில் வந்துதித்த குரும்பசிட்டியைச் சேர்ந்த மங்கைகளுக்கெல்லாம் அரசியாம் மங்கையர்க்கரசியைக் கரம்பிடித்ததன் மூலம் அமரர் அமிர்தலிங்கம் குரும்பசிட்டியின் மருகரானார்.

*குரும்பசிட்டி க. வே மகாதேவன்*
*நன்றி: வரலாற்றின் மனிதன*



# மங்கையற்கரசி - 80

# ஓர் அரசியல் சாட்சியம்

*மு நித்தியானந்தன்*

சுதந்திரத்திற்குப்பிற்பட்ட இலங்கைத்தமிழர் அரசியல் தளத்தில் 1956 -1977 வரைப்பட்டகாலப்பகுதியில் தமிழரசுக்கட்சி தமிழ் மக்களின் ஏகோபித்த குரலாக தன்னை நிலைநிறுத்தியிருந்தது..1956 க்குப்பின் நடைபெற்ற 5 பொதுத்தேர்தல்களிலும் தமிழரசுக்கட்சி தொடர்ந்து பெற்ற வெற்றிகள் இதனை உறுதிசெய்வனவாகும்.

தமிழ்மக்களின் உரிமைப்போராட்டத்தில் தமிழ்மக்களை பேரணியில் திரட்டி அறப்போராட்டத்திலும் ஏனைய சட்டமறுப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபடுத்தி அரசியல் பிரக்ஞையை அடிமட்டமக்கள் மத்தியில் வேரூன்றச்செய்ததில் தமிழரசுக்கட்சியின் பணி அளப்பரியது.

தமிழ்மக்கள்திரளை அரசியல்மயப்படுத்தியபணியில் அவர்கள் இட்டுச் சென்ற அஸ்திவாரம் ஆழ்ந்த அர்ப்பணிப்பிலும் கடும் உழைப்பிலும் உருவானது. அரசுக்கெதிரான அச்சமற்ற போராட்டங்களிலே வார்க்கப்பட்டது.பொலிஸ் அடக்குமுறை, கைது,சிறைச்சாலை என்ற எதிர்ப்பியக்கத்தில் மூர்ச்சனை கொண்டது. ஆணவம் கொண்ட ஆட்சியாளர்களின் புறக்கணிப்பிற்கும் அலட்சியத்திற்கும் எள்ளிநகையாடலுக்கும் மத்தியில் நெஞ்சை நிமிர்த்திய இலட்சிய வேட்கையில் வேர்கொண்டது.

இந்த மாபெரும் அரசியல்பணியில் ஒரு கால் நூற்றாண்டு பகுதியை தனக்குரிமையாக்கும் தகுதி கொண்டவர் மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் அவர்கள்.

தமிழரசுக்கட்சியின் பொதுமேடைகளில் அவரது கம்பீரமான பிரசன்னம் மக்கள்மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றது. மேடைகளில் அவர் தேசிய எழுச்சிப்பாடல்களை இசைத்தபோது கூட்டம் உணர்வு வெள்ளத்தில் தோய்ந்தது.அரசியல் அணிதிரட்டலில் அரசியல் விடுதலை இயக்கப் பாடல்கள் ஆளுமை கொண்ட பெண்களால் இசைக்கப்பட்டபோது அது பெரும் ஆகர்ஷணசக்தியாய் திகழ்ந்திருப்பதை இந்திய சுதந்திரப் போராட்டங்களில் காணமுடிந்திருக்கிறது.ஆபிரிக்க நாடுகளின் விடுதலை இயக்கப்போராட்டங்களில் அரசியல் மேடைகளில் தோன்றி ஆபிரிக்கப்பெண்மணிகள் இசைத்த பாடல்கள் புரட்சி அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கின்றன.

**மங்கையர்க்கரசி: ஓர் அரசியல் சாட்சியம்......**

தமிழரசுக்கட்சியின் ஆரம்ப அமைப்புக்கட்டத்தில் சின்னஞ்சிறுகிராமம் தோறும் தனது கணவருடன் சென்று மக்களுடன் உறவாடி அவர்களின் மத்தியில் நம்பிக்கைக்குரியவராகத்திகழ்ந்தார்.

பெற்றோமெக்ஸ் விளக்கில் –லாந்தர் வெளிச்சத்தில் நடந்த கூட்டங்களில் எல்லாம் அக்கறையோடு பணிசெய்திருக்கிறார்.அரசியல் பிரச்சாரக் கூட்டங்கள் எதிர்க்கட்சிகளின் மூர்க்கத்தனமான எதிர்ப்பின் மத்தியில் நடைபெற்றபோதேல்லாம் அச்சமின்றி மேடையில் தோன்றியவர்.கைக்குழந்தையை வைத்துக்கொண்டு சத்தியாக்கிரகப்போராட்டத்தில் தனது கணவருடன் போராட்டத்தில் இணைந்த மாதரசி இவர். கணவருடன் தடுப்புக்காவலில் மாதக்கணக்கில் சிறைவாசம் கண்ட பெருமகள்.
அரசியல் மேடைகளும் போராட்டங்களும் பொலிஸ் நிலையங்களும் பனாகொடைமுகாமும் இவரது உலகமானது.

இவரது அரசியல் வாழ்வு உல்லாசப்பூங்காவாக இருந்ததில்லை காலம்பூராவும் முட்பாதையாகவே இருந்திருக்கிறது.தனது கணவரையே துப்பாக்கித் தோட்டாவிற்கு பலிகொடுக்க வேண்டிய துர்ப்பாக்கிய பயணத்தை அவர் தேர்ந்திருந்தார்.

விருந்தோம்பும் பெரும் பண்பு கொண்ட இவர்களின் அருங்குணத்தையே பலவீனமான நுழைவாயிலாகக் கொண்டு,கொடியவர்கள் செய்த கோரதாண்டவத்தை கண்முன்னால் காண நேர்ந்த சரித்திரத்தின் ஒரு சாட்சியம் இவர்.

தமிழர் அரசியலில் தீவிர ஈடுபாடு கொண்ட பெரும் தலைவர்களை நாம் கண்டதுண்டு.அன்றும் தான்,இன்றும்தான். அவர்களின் துணைவியரை நாம் அறிந்ததில்லை.பலர் தமது கணவரின் அரசியலுக்கும் தமக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றிருந்தவர்கள்.இன்னும் பலர் இது அநாவசியமான அலுவல் என்று கணவரின் அரசியல் செயற்பாடுகளை அசூசையோடு பார்த்தவர்களாக இருந்திருக்கிறார்கள்.காதல் துணைவனின் காரியம் யாவிலும் கைகொடுத்து வாழ்ந்த மகராசி இவள்.

விடுதலை இயக்கங்கள் தமது குருட்டுத்தனமான பயணத்தில் அரும்பெரும் ஆளுமைகளை அழித்திருக்கின்றன.அந்த நாசகாரச்செயலின் விளைவால் ஒரு சூனிய அரசியல் உலகிற்குள் அவர் சிறைப்பட நேர்ந்தமை துரதிர்ஷ்டமானது.

சென்னையில் அமிர்தலிங்கம் அவர்களோடு மங்கையர்க்கரசியையும் நான் காண நேர்ந்த சந்தர்ப்பங்களில்,ஈழத்து அரசியல் நிலை குறித்து மங்கையர்க்கரசி கொண்டிருந்த கரிசனையை அறிந்துள்ளேன்.

அமிர்தலிங்கம் போன்ற அருங்குணம் கொண்ட ஒரு கணவரை அநியாயமாக பலிகொடுத்த துயரத்தின் பின்னரும் தொடர்ந்து லண்டனில் பொதுவாழ்வில் பங்கெடுத்துவரும் அவரது பணி தொடரவேண்டும்.

**எண்பது வயது காணும் மங்கையர்க்கரசி தேகசௌகரியத்துடன் நீண்டகாலம் வாழ**

**எனது நல்வாழ்த்துகள்!**

*****

காலையில் திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கத்தின் தொலைபேசி என்னை, அமிர்தலிங்கம், அமிர்தலிங்கம், அமிர்தலிங்கம் என்று அரற்ற வைத்தது.
அமிர்தலிங்கத்தின் வாழ்வோடு ஒன்றிவிட்ட அந்தச் சகோதரியை நினைக்கும்போது என்நெஞ்சில் வருவது புறநானூற்றுக் காட்சி ஒன்று. போருக்குச் சென்ற கணவன் பகைவரால் கொல்லப்பட்டு விட்டான். அவன் பிரிவை ஆற்றா அவன் மனைவி, தன்னை நாட்டுக்காக ஈகம்செய்த வீரனின் உடலை அடக்கம்செய்யத் தாழிவனையும் கலஞ்செய்கோவே, கலஞ்செய்கோவே, வண்டிச் சக்கரத்தின் ஆரத்தைத் தழுவிக்கிடந்து, வண்டி செல்லும் மேடு பள்ளம் எல்லாம் சுற்றித்திரிந்த பல்லிபோல, நானும் என் கணவனையே தஞ்சமெனக்கருதி வாழ்வின் மேடுபள்ளம் எல்லாம் கடந்து வந்தேன். இன்று அவனின்றி நானிருக்கின்றேன். கலஞ் செய்யகோவே. ஒரு வேண்டுகோள், என் கணவனை அடக்கம் செய்யும் நீ வனையும் தாழியில் எனக்கும் சிறிது இடம் அருளி, இன்னும் பெரிதாக வனைவாயாக.

அமிர்தலிங்கம் -மங்கையற்கரசி தம்பதிகளை உணர்ந்தவர்களுக்கு இந்த உண்மை புரியும்

*வித்துவான் க.ந. வேலன்*
*நன்றி: வரலாற்றின் மனிதன*



## மங்கையற்கரசி - 80

# தமிழத் தேசியத்தின் அடையாளம்

*வி சிவலிங்கம்*

தமிழ் தேசிய விடுதலைப் போராட்டம் பல்வேறு சிக்கலான பரிமாணங்களைக் கொண்டது. இதில் தனிநபர் பங்களிப்பு, அவர்களின் ஆளுமை என்பதும் கணிசமான தாக்கத்தைக் கொடுத்துள்ளது. அவ் வகையில் பார்க்கும் போது குறிப்பாக திரு. திருமதி அமிர்தலிங்கம் தம்பதிகளின் பங்களிப்பு வரலாற்றின் பிரிக்க முடியாத அங்கமாகும். தமிழ்த் தேசியத்தின் இயங்குவிசை யாழ்ப்பாணத்தை மையமாக கொண்டே இயங்குகிறது. வரலாற்றின் திசை அங்குதான் தீர்மானிக்கப்படுகிறது. எனவே இந்த மைய விசையின் இயங்கு தளத்தின் அச்சாணியாக இருந்த இக் குடும்பம் பற்றி பேசுவது, குறிப்பிடுவது சாலப் பொருத்தமே.

தனது எண்பதாவது அகவைக்குள் காலடி வைக்கும் திருமதி. மங்கையற்கரசி அமிர்தலிங்கம் அவர்கள் குறித்து அதுவும் அவரது சமூக, அரசியல் பங்களிப்பு சம்பந்தமாக பேசுவது அவசியமானதே. இவரின் அரசியல் பிரவேசத்தின் காலகட்டம், அப்போதிருந்த யாழ். சமூகத்தின் இருப்பு, குடும்ப கட்டமைப்பு, அதன் சிந்தனைப் போக்கு போன்ற பல அம்சங்களின் பின்னணியிலிருந்தே அவதானிக்கப்படவேண்டும்.

1931ம் ஆண்டு இலங்கையில் பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட்டிருந்தது. ஆனால் தமிழ்ப் பெண்கள் எவருமே பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்படாத சூழல் மிக நீண்ட காலத்திற்குக் காணப்பட்டது. சமூக சேவைகளிலும் அதிகளவு பெண்கள் ஈடுபடவில்லை. தமிழரசுக் கட்சியின் உயர்மட்ட தலைவர்கள் எவரும் தமது மனைவிமார்களை மக்களுக்கு அறிமுகப்படுத்தியதில்லை. பொது இடங்களிலும் காணப்படவில்லை. இவ்வாறான சமூக பின்புலத்தில் எவ்வாறு மங்கையற்கரசி அமிர்தலிங்கம் அவர்களால் அரசியலிற்கு வர முடிந்தது? இவரால் எவ்வாறு இச் சமூக கட்டுப்பாடுகளை உடைத்து வெளியேற முடிந்தது? அமிர்தலிங்கம் அவர்களின் குடும்ப பின்னணியோடு ஒப்பிடுகையில் வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவர். அவரை அரசியலிருந்து வேறு திசைக்கு மாற்றக்கூடிய தகைமை இவருக்கு இருந்தது. பெரும்பாலான ஆண்கள் மனைவியர்களின் கட்டுப்பாட்டிற்குள் செல்வது சகஜமாக உள்ள புறச் சூழல். இருப்பினும் தனது கணவனின் வழியில் இவர் எவ்வாறு செல்லத் தீர்மானித்தார்?

**தமிழத் தேசியத்தின் அடையாளம்......**

அதுவும் போராட்டமே வாழ்வாகிப்போன அரசியலிற்குள் தன்னைப் புதைத்துக் கொள்ள தள்ளியது எது? தனது கணவனின் பயணத்தில் உறுதியான பங்களிப்பை வழங்கவேண்டும் என்ற காத்திரமான முடிவுக்கு அவர் சென்றிருக்க வேண்டும். தனது சுக துக்கங்களை தியாகம் செய்ய அவர் தன்னைத் தயார்ப்படுத்தியிருக்க வேண்டும். இல்லையேல் இவ்வளவு நீண்ட தூரத்திற்கு அவரால் பயணித்திருக்க முடியாது. கவர்ச்சியான தோற்றம், கணீர் என்ற குரல், அனைவரையும் ஈர்க்கும் சக்தி, கணவரோடு இடைவிடாது இணைந்து செல்லுதல் போன்ற குணாம்சங்கள் தமிழ்ப் பெண்கள் மத்தியிலே புதிய விழிப்புணர்ச்சியை தூண்டியது. பழைமைச் சிந்தனை மரபை உடைத்து பொதுவாழ்வுக்குள் நுழையும் அசைக்க முடியாத பலம் இவரிடம் காணப்பட்டது. தமிழ்த் தேசிய அரசியல் தலைமையின் காத்திரமான பதவியை அலங்கரித்த இத் தம்பதிகள் ஊடகங்களின் விமர்சனங்கள், எதிராளிகளின் அவதூறுகள் என்பவற்றிற்கு இலக்காகியபோதும் அவற்றினை அலட்சியம் செய்து கட்சியின் பணிகளுக்காக ஆயிரக்கணக்கான மைல்கள் பயணம் செய்துள்ளார். தமிழ்க் குடும்ப பெண்கள் தமது இல்லங்களை விட்டு வெளியேறுவது என்பது, பல ஆண்கள் மத்தியிலே அரசியல் விவாதங்களை முன் வைப்பது என்பது முடியாத காரியமாக கருதப்பட்ட காலத்தில் இவரது அரசியல் பயணம் ஆரம்பிக்கிறது. சமூகத்தில் காணப்பட்ட பல பிற்போக்கு சிந்தனைகளை உடைத்த ஓர் வீராங்கனையாகவே காண முடிகிறது.

கால ஓட்டம் சமூகத்தில் பல மாற்றங்களைத் தந்திருக்கிறது. பெண்கள் அரசியலில் தீவிரமாக ஈடுபடவும், சிறை செல்லவும், ஆயுதம் தாங்கிப் போராடவும் கூடிய சூழல்களாக சமூக பரிமாண மாற்றம் ஏற்பட்டுள்ளது. இம் மாற்றங்களுக்கான தூண்டுகோலாக திருமதி. மங்கையற்கரசி அமிர்தலிங்கம் அவர்கள் இருந்துள்ளார். குடும்ப வாழ்வு, சமூகம், பொதுவாழ்வு, அரசியல் என்பவற்றின் அழுத்தங்களினூடாக அவரது பயணம் தொடர்ந்திருக்கிறது. அதுவும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த முடிவுகளை எடுக்கும் பொறுப்பான பதவியை வகித்த ஓர் குடும்பம் என்ற வகையில் அவர் எதிர்நோக்கிய சவால்களை எண்ணும்போது வியக்க வைக்கிறது.

தமிழ்த் தேசிய அரசியல் வரலாற்றின் பிரிக்க முடியாத அங்கமாக உள்ள இவர் இன்றையதலைமுறையினரால் புரிந்துகொள்ளப்பட வேண்டியவர். தமிழ்ச் சமூகத்தின் கலாச்சாரத்தின்

சின்னமாக உள்ள அவரின் வாழ்வு, தியாகம், போராட்ட உணர்வு என்பன என்றுமே நினைவில் கொள்ள வேண்டியவை.

உலகம் இன்று மிகவும் குறுகியதாகி, சிறிய கிராமமாக மாறியுள்ளது. மிக அண்மைக் காலத்திற்குள் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டு வரும் நவீன சூழலில் இன்னமும் பிற்போக்கு சிந்தனைகளுக்கு எதிரான போராட்டங்கள் தொடரவே செய்கின்றன. எனவே பழமைவாத சமூக சிந்தனைக்குள் வாழ்ந்த சமூகத்தின் பின்னணியிலிருந்து அரசியல் முன்னணிக்கு தன்னை எடுத்துச் சென்ற அவர் என்றும் எமக்கு முன்னுதாரணமாகும்.

மனதார வாழ்த்துகிறேன்.

*****

மங்கையருள் மாணிக்க மாமணிப்பேர்
மங்கையர்க்கு அரசியெனும் மங்கை நல்லாள்
பொங்குகடல் அலையெறியும் சொல்லின் ஆட்சி
பூமித்தாய் பொறையைப் போல் ஆன தம்மா!
சங்கொலிகள் எல்லாமே சங்கமிக்கும்
சரித்திரத்துப் புத்தோடே எழுதும் காலம்
இங்குவந்தே நிலையான அமைதிப் பூங்கா
இயல்பாக அமைந்தெளிரும் வெற்றி சூழ்க!
செப்பரிய அருங்குணத்துச் செல்வர்நாமம்

*பெருங்கவிக்கோ வா.மு சேதுராமன்*
*நன்றி: வரலாற்றின் மனிதன*



# மங்கையற்கரசி - 80

## தமிழ்த் தேசியத்தின் தலைமகள்

*தமிழர் தகவல்*

இலங்கை சுதந்திரமடைந்த 65 ஆண்டு காலத்தில் ஈழத்துத் தமிழ் தேசியத்தினது வரலாறும் அதன் போராட்டத்தினது வரலாறும் ஒன்றாகும். இந்த வரலாற்றிரோடு பின்னிப் பிணந்த திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம் அவர்களுக்கு வயது எண்பது. ஆயிரம் பிறை கண்டதான எண்பதாண்டு கால வாழ்வு என்பது சைவத் தமிழர் வாழவின் முக்கியமான நிகழ்வாகக் கருதப்படுகின்றது.

மங்கையற்கரசி அவர்கள் 1933ம் ஆண்டு யூலை மாதம் 3ம் திகதி குரும்பசிட்டியைச் சேர்ந்த வணிகர் முத்துக்குட்டி வல்லிபுரம் - ராமலிங்கபிள்ளை நாகம்மா தமபதிகளின் மகளாக மானிப்பாய் கிரீன் வைத்தியசாலையில் பிறந்தார். கல்விக்காலத்தின் பின்பாக இன்று நூற்றாண்டு விழாக்காணும் இராமநாதன் கல்லூரியில் சிலகாலம் ஆசிரியராகக் கடமையாற்றினார். 1954ம் ஆண்டு திரு அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் அவர்களைத் திருமணம் செய்தார். காண்டீபன், பகீரதன் என்கின்ற இரண்டு ஆண் மகவுகளின் தாய். சுதந்திரா, அரவிந்தன், ஆரபி என்கின்ற மூன்று செல்வங்களின் பேர்த்தியார்.

திரு அமிர்தலிங்கம் அவர்களைப் பதிவுத்திருமணம் செய்த அன்று மணமகளுடன் நிற்கமுடியாமல் அமிர்தலிங்கம் கூட்டத்தில் கலந்து கொள்ளச் சென்றுவிட்டார். இதன் விளைவு அடுத்த முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு தனது கணவரை எங்கும் எப்போதும் விட்டுப் பிரியாத காதல் மனையாளாக இருந்தார். தமிழரசுக் கட்சியின் தொண்டனாக ஆரம்பித்து அதன் செயலாளராக, தலைவராக, வட்டுக்கோட்டைப் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவர் திரு அமிர்தலிங்கம். தமிழினத்தின் ஆரம்பகால அரசியற் போராட்டங்கள் அனைத்திலும் தனது கணவரோடு முன்னணிப் போராளியாகக் கலந்து கொண்டார். சிறி எதிர்ப்புப் போராட்டம், சத்தியாக்கிரகம் எனப் பலபோராட்டங்களில் கலந்து கொண்டதோடு சிறைசென்றார். மகன் காண்டீபன் வயிற்றில் இருந்தபோது சிறி எதிர்ப்புப் போராட்டத்தில் பொலிசார் தலைவர்களைக் கைதுசெய்ய வந்தபோது தடுத்துநிறுத்துவதற்காக ஜீப் முன்பாகப் படுத்த வீராங்கனை. சிறு குழந்தைகளான தனது இரண்டு மகன்களையும் விட்டுவிட்டு சத்தியாக்கிரகத்தின் பின்பாக மூன்று மாதங்கள் கணவருடன் தடுப்புக் காவலில் இருந்தார்.

**தமிழ்த் தேசியத்தின் தலைமகள்.....**

1972க்குப் பின்பான தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதயமும் அதன் செயலாளராகவும் தலைவராகவும் விளங்கிய திரு அமிர்தலிங்கம் அவர்கள் தமிழினத்தின் ஒப்பற்ற தலைவராக ஏற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னணியில் இருந்தவர் மங்கையற்கரசியே.

1977 தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவரான கணவர் அமிர்தலிங்கத்தோடு சேர்ந்து உலகத்தலைவர்கள் பலரைச் சந்தித்தவர் இவர். இந்திரா காந்தி, ராஜிவ் காந்தி உட்பட பல இந்தியத் தலைவர்களின் அன்புக்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமானவர். 1989இல் கொழும்பில் வைத்து திரு அமிர்தலிங்கம் அவர்களை கொலையாளிகள் கொலை செய்தனர். 56 வயதில் விதவையாக்கப்பட்ட இவரின் கால்படாத கிராமங்கள் எதுவும் தமிழ் ஈழத்தில் இல்லை. அதுபோலவே இவர் பாடாத, பேசாத அரசியல் மேடைகள் ஈழத்தில் இல்லை எனலாம். அவ்வளவு தூரம் தமிழினத்தின் வரலாற்றோடு பின்னிப் பிணைந்தவர் இவர்.

ஈழத் தமிழ்த் தேசியத்தின் ஆரம்பகால எழுச்சிக்கும் வளர்ச்சிக்கும் காரணமான திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம் அவர்களின் படத்தினை யூலை மாத இதழின் அட்டையில் பிரசுரிப்பதில் தமிழர் தகவல் கௌரவம் கொள்கிறது.

*****

நான் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோதும் இல்லாதபோதும் திரு அமிர்தலிங்கம் எத்தனைமுறை தமிழகத்திற்கு வந்தாலும் ஒவ்வொரு முறையும் தமது துணைவியாரோடும், குடும்பத்தினரோடும் என்னை வந்து சந்திக்காமல் சென்றதே கிடையாது. எங்கள் குடும்பமும் அவர்கள் குடும்பமும் ஏதோ உறவுக்கார குடும்பம் என்பதைப்போல பாச உணர்வோடு பழகி வந்தார்.
அமிர்தலிங்கம் அவர்களும் அவரது துணைவியாரும் தம்பதிகள் என்பதைவிட, உற்ற தோழர்கள் என்ற முறையிலே பழகி வந்த நிலைகளை எல்லாம் நான் நன்கறிவேன். துணைவியார் இல்லாமல் அவர் எந்த நிகழ்ச்சிக்கும் தனியாகப் பெரும்பாலும் செல்வதில்லை. என்னைச் சந்திக்க வரும்போதெல்லாம் தம்பதியர் இருவரும் சேர்ந்தே தான் வருவார்கள்.

*கலைஞர் மு கருணாநிதி*
*நன்றி: வரலாற்றின் மனிதன*



# மங்கையற்கரசி - 80

## பாட்டுடைத் தலைவி

*'மாலி' – மகாலிங்கசிவம்.*

'தமிழ்பேசும் மக்களுக்கு இரண்டு வழிகளே உள்ளன. ஒன்று நிபந்தனையற்ற சரணாகதி. மற்றையது தமிழபேசும் மக்களை அரசியலுரிமையற்றவர்களாகச் செய்யும் இப்போதைய அரசியலமைப்பிலிருந்து மீட்பதற்காக ஓர் இயக்கத்தை ஆரம்பிப்பதாகும். பிந்திக் கூறிய வழி கடினமானது. ஆனால், வீரர்களுக்குரிய வழி அதுவேயாகும்'.

இந்தப் பாடுபொருளோடு 1949இல் ஆரம்பித்து, வளர்ந்து, 2009இல் முடிவடைந்த காவிய வரலாறு, இலங்கைத் தமிழர்களுடையது.

அறுபது ஆண்டுகள், அதன் எழுச்சியும் துயரமும், தீரமும் சோதனைகளும், சாதனைகளும் வேதனைகளுமாக அந்த யுகம் முடிந்தது. எப்படி முடிந்ததோ ஆனால், விடுதலைக்காகப் போராடும் ஓர் இனத்தின் எழுச்சி வரலாறாகவும், படிப்பினையூட்டும் பெரும் காவியமாகவும் அது முடிந்தது.
இந்த 'காவிய' பெருமை அந்த வரலாற்றில் உண்டு.

தமிழ்க் காங்கிரசிலிருந்து விலகி, 'வீரர்களுக்குரிய வழி'யாக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியை ஆரம்பித்த திரு எஸ் ஜே வி செல்வநாயகம், அந்த வரலாற்றின் காவிய மாந்தராக அவர் விலகும்போது, 'தமிழினம் ஒன்றில் உரிமைபெற்ற இனமாக வாழவேண்டும். அல்லது, செத்து மடியவேண்டும்' என்று கூறிப் போந்தார். அதிலிருந்து தொடர்ந்தது அக் காவியத்தின் இரண்டாவது பகுதி.

ஆக, சட்டக் கல்லூரி மாணவனாக பிரவேசித்து, முதிர்ந்த அரசியல் தலைவராக நீங்கும் திரு அ அமிர்தலிங்கம், இக் காவியத்தின் பாட்டுடைத் தலைவன். திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம், இக்காவியத்தின் சிறப்புமிக்க பாட்டுடைத் தலைவி.



# மங்கையற்கரசி - 80

## வாழும்போதே வாழ்த்துவோம்!

*ஈ கே ராஜகோபால்*

தமிழீழ அரசியல் வானில் தன்னிகரற்ற, தனித்துவமான தலைவனாக விளங்கி, இலங்கைத் தமிழர்களின் பெருமைக்குரியவராக வாழ்ந்து, மறைந்த, ஒப்பற்ற மனிதர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் இதயத்தில் அமர்ந்திருந்த துணைவியார் மங்கையற்கரசியை இலகுவாக நாம் எல்லாம் மறந்துவிடமுடியாது! முப்பத்தைந்து ஆண்டுகள் ஈருடல் ஓருயிராக இல்லற வாழ்விலும், அரசியல் வாழ்விலும், தன் கணவரோடு கலந்துறவாடியவர்!

1952ம் ஆண்டு யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரியியில் நடந்த தமிழ் விழாத் தான் இவர்கள் இருவரையும் சேர்த்து வைத்தது! தமிழ்நாட்டுதமிழ் இலக்கிய மேதைகளும், அறிஞர்களும் பங்கு கொண்ட பிரமாண்டமான விழா. 'கல்கி' கிருஷ்ணமூர்த்தி, ரா.பி. சேதுப்பிள்ளை, இராசமாணிக்கனார், மு. வர-தராசனார் போன்றவர்களின் அரிய சொற்பொழிவுகளைக் கேட்க மக்கள் திரண்டிருந்தனர்.

கமால்தீன், இளையவரான வளக்கறிஞர் அமிர்தலிங்கமும் இன்னும் சில இலங்கை அறிஞர்களும் பேசுவதற்காக வந்திருந்தனர். அந்தத் தமிழ் விழா பிரசித்திபெற்ற, இராமநாதன் மகளிர் கல்லூரி மாணவிகள் சிலரின் இனிய பாடலுடன் ஆரம்பமானது. 'பழம் தமிழர்...' என்ற வரிகளோடு தொடங்கிய அப்பாடலில் மயங்கிய மண்டபம் நிறைந்த மக்களில், இளைஞன் அமிர்தலிங்கமும் ஒருவர். பாடிக்கொண்டிருந்த இளம்பெண்களில் ஒருவரின் குரலும், அழகான தோற்றமும் அந்த இளைஞனுக்குப் பிடித்துவிட்டது!. அவரது மனதிலே, அன்றே ஒரு இறுக்கமான இடத்தை மங்கையற்கரசி பிடித்துக் கொண்டார்.

பாடசாலையில், அந்தக்கால ஏச் எஸ் சி என்கின்ற வகுப்பில் படித்துக்கொண்டிருந்த அந்த மாணவியின் மீது வைத்த விருப்பத்தை, இரு வீட்டுப் பெற்றோரின் சம்மதத்தோடு திருமணம் என்ற பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டார். அமிர்தலிங்கத்தின் வாழ்வோடும், அவரது முழுநேர அரசியல் வாழ்விலும் பங்காளியானார். 21 வயதும் 27 வயதும், தெளிந்த மனத்தோடு ஒத்த கருத்துடையவர்களாகப் பவனிவரத் தொடங்கினர்.

**வாழும்போதே வாழ்த்துவோம்!......**

அரசியல் மேடைகளில் உணர்ச்சிக் கொப்பளமாக முழக்கம். அதற்கு முன்னரோ, பின்னரோ அந்தக் கணீரென்ற இனிய குரல் தென்றலென வருடிச்செல்லும், தமிழன் என்ற தன்மான உணர்வை ஏற்படுத்தும். தமிழரசுக் கட்சியின் அறப்போராட்டங்கள், அடுத்தடுத்து மாநாடுகள், தேர்தல்கள் என்றெல்லாம் சூறாவளியாகப் பயணிக்கும் தன் கணவருக்கு ஈடுகொடுத்து, அவர் இன்ப துன்பங்களில் எல்லாம் பங்கெடுப்பார்.

1970ம் ஆண்டு யாழ்ப்பாணம் ஈழநாடு பத்திரிகையில் பணியாற்றிக் கொண்டிருந்தபோது, ஒரு பேட்டிக்காக மூளாயிலுள்ள அவர்களது இல்லத்தில் சந்தித்த நினைவுகள் இன்னமும் என் நெஞ்சில் மறக்கமுடியாத நினைவுகளாக வாழ்கின்றன. அரசியல் தவிர்ந்த அவர்கள் திருமணம் பற்றியும் குடும்பவாழ்க்கை பற்றியும் நான் கேட்ட கேள்விகளுக்கு எல்லாம் எவ்வித சலிப்புமின்றி, மிக உற்சாகமாகப் பதில் சொன்னார்கள். 'அரசியல் தம்பதிகள்' என்ற தலைப்பில் இருவரது படங்களுடனும் 'ஈழநாடு' இதழில் இந்தப் பேட்டி வெளியானது. அப்போது தங்களது சந்திப்பும், திருமண நிகழ்வும் எப்படி ஏற்பட்டது என்பது போன்ற விபரங்களை எழுதினேன். அவற்றைத்தான் மேலே சுருக்கமாக உங்களுடன் பகிர்ந்து கொண்டேன்.

தலைவர் அமிர்தலிங்கத்தின் மறைவின் பின் இரு மகன்கள் காண்டீபனும் - பகீரதனும் தாம் வாழும் லண்டனுக்கு வரவழைத்துக் கொண்டனர்.

'என் கணவர் பண்பானவர். அன்பானவர். ஒரு நாள்கூட கடுஞ்சொல் கேட்டறியேன். அவருடன் வாழ்ந்த அந்த சந்தோசமான வாழ்க்கையை நினைத்து, நினைத்து எப்படியோ உயிரோடு வாழ்ந்து கொண்டிருக்கின்றேன். நானும் அந்த 1989ம் ஆண்டு யூலை 13ம் திகதி அவருடன் கூடத்தான் இருந்தேன். மேலே யாருடனோ பேசிவிட்டு வருவதாக சொன்னார். எல்லாமே சில நிமிடங்களில் முடிந்து போய் விட்டது.' சமீபத்தில் அவருடன் லண்டனில் பேசிக்கொண்டிருந்தபோது, அம்மா கண்கலங்கியபடியே சொன்னவை இவை.

பெருந்தலைவருடைய அன்பான மனைவியான மங்கையற்கரசிக்கு, 03. 07. 2013 அன்று 80வது பிறந்த தினம். இலங்கையில் அப்படி ஒரு தலைவர் ஈழத்தமிழனாக இனிப் பிறப்பாரா? என்கிற அளவுக்கு தந்தை செல்வாவின் செல்லப்பிள்ளையாக இருந்த அமிர்தலிங்கத்தின் இதய சிம்மாசனத்தில் வீற்றிருந்த அம்மையாரை நீடூழி வாழ வாழ்த்துவோம்.

*நன்றி: தமிழர் தகவல்*



# மங்கையற்கரசி - 80

## தமிழ்த் தேசியத்தின் பெண் குரல்

*நாக. சிறிகெங்காதரன்*

மங்கை அக்கா என அவரோடு பழகியவர்களால் குறிப்பாக தமிழரசுக்கட்சியின் இளைய தலைமுறையி-னரால் எப்போதுமே அன்பாக அழைக்கப்பட்ட திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம் அவர்களுக்கு வயது எண்பது. அவரைப் பாாக்கின்றவர்களுக்கு அதிசயமாக இருக்கும். உடல், வயதிற்குத் தக்கதான சகல உபத்திரங்களைத் தந்தாலும் முகம் எப்போதும் போன்ற செந்தழிப்பான முகம்தான். திரு அமிர்தலிங்கம் தமிழத் தேசியத்தின் தலைமகன். நானோ தமிழரசுக் கட்சியை எதிர்த்து நின்ற இடதுசாரி அரசியலின் செயற்பாட்டாளன். ஆனாலும் என்னுடைய அரசியலை மீறியே மிக இளம் வயதிலிருந்து பொதுவேலைகளில் ஈடுபட்டு வருகிறேன். இதனாலேயே நானும் நண்பர்களும் முன்னின்று தெல்லிப்பழையில் நடாத்திய அம்பனை-கலைப்பெருமன்றம், அம்பனை-சூட்டிங் ஸ்ரார் விளையாட்டுக்கழகம் ஆகிய அமைப்புகளின் செயலாளராக தமிழ்த் தேசியத்தின் சகல தலைவர்களோடும் பழகவும் செயற்படவும் வாய்ப்புக் கிடைத்தது.

கலை - இலக்கிய செயற்பாடுகளில் காத்திரமான பங்களித்த கலைப்பெருமன்றத்தின் உழவர் திருநாள் கருத்தரங்கிற்கு திரு அமிர்தலிங்கம் அவர்களை நேரில் சென்று அழைத்திருந்தேன். ஆனாலும் இருவருடைய வெவ்வேறு திசை செல்லும் தீவிர அரசியல், இணைந்து பழகுவதற்கான வாய்ப்பை வழங்கவில்லை. தமிழ்த் தேசியத்தின் காரணமாகவே இங்கே வந்த என்னுடைய அரசியலின் பார்வை 1977 தேர்தலின் பின்பாக சிறிது மாற்றத்தைக் கண்டது. கம்யூனிஸ்ட் கட்சியும் சமசமாஜக் கட்சியும் முதன்முதலாக அந்தத் தேர்தலில் சந்தித்த தோல்வி ஒரு காரணம். பண்டா-செல்வா ஒப்பந்தத்தை கிழித்தெறியக் காரணமான ஜே ஆரின் சரித்திர வெற்றி இன்னொரு காரணம். இவற்றினால் திரு அமிர்தலிங்கத்தோடு பழகுகின்ற வாய்ப்புக் கிடைத்தது. அவருடைய குடும்பத்தோடும் நெருங்கிப் பழகும் வாய்ப்பும் கிடைத்தது. தெல்லிப்பழையில் அமிரின் தீவிர ஆதரவாளர்களான குணாளன் - ஜெயபாலன் சகோதரர்களும், இங்கே அவர்களின் ஆதரவாளரான அருள்தாசும் என்னுடைய நண்பர்கள்.

ஆனாலும் அமிர்தலிங்கம் தலைமைதாங்கி முன்னிலைப்படுத்திய தமிழத் தேசியத்தினை, புதிதாக வந்து வலிந்தெடுத்த தலைமை அவரையும் எதிரியாகப் பார்க்கத் தொடங்கியது. அத்தகைய பார்வைக்கு

உட்பட்ட என்போன்றவர்கள் புலம்பெயர் மண்ணில் இணைந்து கதைக்கவும் செயற்படவும் நேர்ந்தது. இதனால் தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் நட்பாகச் செயற்படமுடிந்தது. திரு அமிர்தலிங்கம் அவர்கள் அந்தக் காலங்களில் இங்கு வந்தபோது அவருடை அரசியல் சந்திப்புக்களை நடாத்தும் வாய்ப்புக் கிடைத்தது. அவருடைய அறிவு, ஆழுமை எல்லாவற்றிற்கும் மேலாக எதற்கும் எப்போதும் தலைவணங்காத அவரின் குணாசியத்தையும் காணமுடிந்தது.

அவர் எதிர்க்கட்சித் தலைவராகவும் 83க்குப் பின்னரான தமிழினத் தலைவராகவும் உலகத் தலைவர்களை நிறையவே சந்தித்தார். முதிர்ச்சி பெற்ற அவருடைய தலைமையில் தமிழினம் ஓர் ஏற்றுக்கொள்ளத்தக்க தீர்வைக் கண்டு இலங்கைத் தீவில் நிம்மதியான வாழ்வைக் காணும் என்ற என் போன்றோரின் நம்பிக்கைகள் 1989 யூலை 13ம் திகதி கொழும்பில் நடந்த படுகொலை இல்லாமல் செய்துவிட்டது. அமிர்தலிங்கத்தின் படுகொலை மங்கையற்கரசி அம்மையாரை 56 வயதிலேயே விதவையாக்கி விட்டது. அமிர்தலிங்கத்தை வாழ்வின் முதிர்ச்சியான தருணத்தில் - அதுவும் இலங்கைத் தமிழர்களுக்கு – மிகவும் வேண்டிய தருணத்தில் எம்மிடமிருந்து பறித்து விட்டது. அதன் பின்னர் இடம்பெற்ற அழிவுகளே அதற்கான சான்றுகள்.

அறிவோடும் திறமையோடும் உலகம்முழுக்கக் குரல்கொடுக்க வல்லவரான அமிர்தலிங்கத்தின் மனைவியாக, தமிழத் தேசியத்தின் முன்னணிப் பெண் முகமாக உள்ள அம்மையார் நீடு வாழவேண்டும். இன்று அவரை மட்டும் நாம் வாழ்த்தவில்லை. அவரை வாழ்த்துவதன் மூலம் தமிழினத்தின் பழைய சரித்திரத்தையும் அதில் குறைவில்லாத இந்தக் குடும்பத்தின் பங்களிப்பையும் மீண்டு பார்க்கின்ற அனுபவம் கிடைக்கும். அதன் மூலமாவது நடைமுறைச் சாத்தியமான புதிய சிந்தனைகள் எம்மத்தியில் தோன்றட்டும்

**அம்மாவுக்கு என்றும் எனது வாழ்த்துக்கள்!**

## மரணமும் ஒரு வரலாறு

*ஆர் நடராஜன், இந்து துணை ஆசிரியர்*

அமிர்தலிங்கம் வாழ்ந்த முறையாலும் வீழ்ந்த முறையாலும் வரலாறு படைத்தவர். அவரைக் கொன்றவர்கள் தமிழ்ப் பண்பாட்டைக் கொன்றவர்கள். 'விருந்து' என்ற தமிழ் வாழ்வியல் இலக்கணத்தையும் வீழ்த்தியவர்கள். அமிர்தலிங்கத்தின் நாட்கள் குறிக்கப்பட்டிருந்தன என்பதைப் பலர் அறிந்திருந்தார்கள். அவரும் அறியாமல் இல்லை. ஆனால் அப்படி ஒரு மரணம் நிகழ்த்தப்படும் என்று எவரும் என்றும் எதிர்பார்க்கவில்லை. பெரிய புராணத்தின் 'முத்தநாதன்' மெய்ப்பொருள் நாயனார் வரலாறே நினைவுக்கு வருகிறது.


'தத்தா நமர்' என்று மெய்ப்பொருள் நாயனார், குத்தப்பட்டதன் பிறகு சொன்னார். கொலையாளிகள் வருவதற்கு முன்பே 'தத்தா நமர்' என்று அமிர்தலிங்கம் சொல்லி விட்டதனால் அவர்கள் துப்பாக்கிகளுடன் அனுமதிக்கப்பட்டார்கள் - ' *மைபொதி விளக்கேயன்ன மனதினில் கறுப்பு வைத்து' நுழைந்த விருந்தாளிகள்.*

வெகு இயல்பாக, நட்புணர்வுடன் உரையாடும் இயல்பு கொண்டவர். அவர் யாரையும் பழித்து, இகழ்ந்து பேசிக் கேட்டதில்லை. அவ்வளவு நயத்தக்க நாகரிகம் கொண்டவர். அவருக்கா இந்த கதி என்று நினைத்துப் பார்த்தால் மனம் புழுங்கித் தவிக்கிறது.

எந்த ஒரு இயக்கத்திற்குத் தலைமை தாங்குவதென்றாலும் அதற்கான மனவலிமையும், நாவன்மையும் எப்படி இருக்கவேண்டுமென்றால் அமிர்தலிங்கம் போலிருக்க வேண்டுமென்று தயங்காமல் சொல்லி விடலாம். அந்த அளவிற்குப் பண்புள்ள மனிதராக வாழ்ந்து வந்தார்.

**அந்த மாமனிதரின் வாழ்வில், அனைத்திலும் தோள்கொடுத்துத் துணை நின்றுள்ள அவரின் துணைவியார் எப்படிப் பார்த்தாலும் மங்கையற்கரசியே!**

*நன்றி: வரலாற்றின் மனிதன்*












Cover concept & design by K K Rajah